FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035250

1. District மாவட்டம்: Nilgiris  PS: காவல்நிலையம்: V & AC, Ooty  Year: ஆண்டு: 2019  FIR No.: மு.த.அ. எண்: 02  Date: நாள்: 8.2.2019

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7 of PC (Amendment)

(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: Act. 2018

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை  08.02.19 Prior to 13.45

Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 08.02.19  Time to : நேரம் வரை 17.30 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 25 km East.

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  Office of the Medical Officer. Govt Hospital. Coonoor. the Nilgiris.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  H. Prakash  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் Indian Hindu  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் I/c. District Inspection Cell officer.  (g) Address : முகவரி O/o the District Collectorate Udhagamandalam. the Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

B. Nandhakumar. Record Assistant. Govt. Hospital. Coonoor the Nilgiris

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.18(HCL-12)

Scanned by CamScanner

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(R. PRAKASH) 8/2/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 08. 02. 2019.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பா. கீதாலட்சுமி
Rank: நிலை .................... No. எண் ..........
ஆய்வாளர், உ.த.க. பிரிவு
நீலகிரி மாவட்டம்.

* GCP 240-34(Type 2) 90,000 Cps. 21-3-10(HCL-12)p.2

Scanned by CamScanner

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 08.02.2019-ம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமைப் பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பார்வை: 1) நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ப.வெ.அ1/30/2019, நாள்:08.02.19. நீலகிரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) ஆகிய நான், இன்று 08.02.2019-ம் தேதி குன்னூர், மௌண்ட் ரோட்டில் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து இவ்வருட வருமான வரி கணக்கை தாக்கல் செய்து தடைபடாமல் சம்பளம் கிடைப்பதற்கு அங்குள்ள அலுவலர் மற்றும் ஊழியர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், நான் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் அவ்வலுவலகத்தை இன்று (08.02.2019) சுமார் 13.45 மணிமுதல் 16.00 மணிவரை திடீர் தணிக்கை மேற்கொண்டோம். இந்த திடீர் தணிக்கையின்போது அங்கிருந்த பதிவறை உதவியாளர் திரு.B.நந்தகுமாரிடமிருந்து பணம் ரூ.29,000/- இருந்தது. இது குறித்து கேட்க அவர் இந்த வருடம் வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து ஆடிட்டரிடம் சரிபார்த்து வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்து தாமதமின்றி மாத சம்பளம் பெற குன்னூர் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும்

Geethalakshmi
8/2/19
Insp. V&AC, The Nilgiris

Scanned by CamScanner

ஊழியர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்றிருப்பதாக கூறினார். அத்துடன் பணம் கொடுத்தவர்கள் விவரத்தை ஒரு பேப்பரில் எழுதி வைத்திருந்தார். அந்த பேப்பரும், மேற்படி பணம் ரூ.29,000/-மும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அப்போது ஒரு செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.29,000/ , பணம் கொடுத்தவர்கள் விவரம் அடங்கிய பேப்பரையும் தங்களிடம் ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இடம்:உதகமண்டலம் நாள்: 08.02.2019 ஒப்பம் (H.பிரகாஷ்) தலைமைப் பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Submitted: Received the above written complaint and proceedings on 8.2.2019 at 17.30 hrs and registered the same in V & AC, the Nilgiris Cr.No.2/2019/AC/NI. ஒப்பம் கீதாலட்சுமி 8.2.219 Inspector of Police, Vigilance and Anti - Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 08.02.2019 between 13.45 hrs and 16.00 hrs at Office of the Medical Officer, Government Hospital, Coonoor, the Nilgiris District. முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 08.02.2019 ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), பொறுப்பு மாவட்ட மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ், ஆகிய நான், மாவட்ட ஆய்வுக்குழு பணியை பார்த்து வரும்போது இன்று நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடம் இந்த வருட வருமான வரி கணக்கை தாக்கல் செய்து தடையாமல் சம்பளம் கிடைப்பதற்கு அங்குள்ள அலுவலர் லஞ்சமாக பணம்

Geethalakshmi
8/2/19
Insp, V & AC, the Nilgiris

Scanned by CamScanner

பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நீலகிரி மாவட்டம், ஊதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி என்பவருடன் போலீஸ் பார்ட்டி சகிதம், குன்னூர், மௌண்ட் ரோட்டில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை இன்று (08.02.2019) ஆம் தேதி முற்பகல் சுமார் 13.45 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொண்டோம். திடீர் தணிக்கை சகிதம் குன்னூர் அரசு மருத்துவமனையின் மேல்பகுதியில் உள்ள அலுவலக அறைக்கு சென்றபோது, அங்கு தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவர் C.A.விஸ்வநாதன் அவர்கள் அவருடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி இருந்த இருக்கையில் அலுவலக கண்காணிப்பாளர் திரு.B.ராஜசேகர், அம்மா காப்பீட்டு திட்ட மேலாளர் திருமதி.மரிய ஷீபா, உதவியாளர் திரு.S.மோகன், இளநிலை நிர்வாக அலுவலர் திரு.உதயன், மருத்துவர்.ரமேஷ், மருத்துவர்.கிருஷ்ணராஜ் மற்றும் மருத்துவர்.பவித்ரா ஆகியோர் இருந்தனர். முதலாவதாக தலைமை மருத்துவ அதிகாரி C.A.விஸ்வநாதன் அவர்களை விசாரணை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேண்டினுடைய வலதுபக்க பாக்கெட்டில் பணம் ரூ.80/ இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. அவரை இந்த திடீர் தணிக்கைக்கு உடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ள திரு.விஸ்வநாதன் அவர்களும் சம்மதித்து உடன் இருந்தார். அடுத்ததாக கண்காணிப்பாளர் திரு.B.ராஜசேகர் என்பவரை விசாரணை செய்ய அவர் தனது சட்டையின் இடது மேல்பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.350/ ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அவரை ஒட்டி நின்றுக்கொண்டிருந்த அம்மா காப்பீட்டு திட்ட வார்டின் மேலாளர் திருமதி.மரிய ஷீபா அவர்களை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய கைப்பையிலிருந்து பணம் ரூ110/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக நின்றுக்கொண்டிருந்த உதவியாளர் திரு.S.மோகன் என்பவரை விசாரணை செய்ய அவர் தானாகவே அவருடைய

8/2/19
Insp. VAC, The Nilgiris

Scanned by CamScanner

சட்டையின் மேல்பாக்கெட்டிலிருந்து ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதைப்பற்றி கேட்க இரத்த வங்கிக்கான அரசு பணம் என்று சொன்னார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அவருடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து ரூ.20/ ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அலுவலக உதவியாளர் திரு.S.அன்பரசு உணவு பாக்கெட்டுடன் தலைமை மருத்துவர் அறையின் உள்ளே வந்தார். அவரை விசாரணை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.1,550/ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அரிசி வாங்குவதற்காக வைத்திருந்த சொந்த பணம் என்றதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை நிர்வாக அலுவலர் திரு.R.உதயன் என்பவரை விசாரிக்க அவர் தனாகவே தன்னிடமிருந்த பணம் ரூ.4,970/ ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருக்கையில் அமர்ந்திருந்த யோகா மருத்துவர் மருத்துவர்.ரமேஷ் என்பவரை விசாரிக்க, அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.8,000/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி கேட்க அவர் தான் திருப்பத்தூரிலிருந்து பணியில் இன்று சேர்ந்ததாகவும், குன்னூர் அரசு மருத்துவமனைக்கு வந்து தலைமை மருத்துவரை சந்தித்ததாகவும், பணம் ரூ.8,000/- திருப்பத்தூரிலிருந்து தன்னுடைய செலவிற்காக எடுத்து வந்ததாகவும் கூறினார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அமர்ந்திருந்த மருத்துவர்.கிருஷ்ணராஜ் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடம் பணம் எதுவும் வைக்கவில்லை என்று கூறினார். அடுத்ததாக அமர்ந்திருந்த மருத்துவர்.பவித்ரா என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னிடமிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.12,000/-ஐ தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அதுபற்றி விசாரிக்க மருத்துவர் தேவ்நாத் என்பவருக்கு நாளை நடைபெற உள்ள திருமணத்திற்கு அன்பளிப்பு அளிப்பதற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். எனவே அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

Signature
8/2/19
Insp. VAC, The Nilgiris

Scanned by CamScanner

அடுத்ததாக தலைமை மருத்துவ அதிகாரி அலுவலக நுழைவாயிலின் இடதுபுறமாக வர அதன் முன் இருக்கையில் பதிவறை உதவியாளர் திரு.B.நந்தகுமார் என்பவர் அவர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் அருகே ஆண் செவிலியர் திரு.பால்பாண்டி என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். பால்பாண்டியை விசாரிக்க அவர் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய அதன் விவரங்களை கொடுக்க வந்ததாகக் கூறினார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை. நந்தகுமாரை விசாரிக்க, அவர் தனது சட்டையின் மேல்பாக்கெட்டில் பணம் ரூ.230/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் நந்தகுமார் தனது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் 100 ரூபாய் நோட்டுக்களாக பதிநான்கும், 200 ரூபாய் நோட்டுக்களாக மூன்றும், 500 ரூபாய் நோட்டுக்களாக பன்னிரெண்டும் ஆக மொத்தம் ரூ.8,000/- இருந்ததையும், தனது மேஜையின் வலதுபக்க டிராயரில் 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் 42 தாள்களுடன் இருந்த பணம் ரூ.21,000/-ஐயும் எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் ரூ.29,000/-ம், இந்த வருட வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து ஆடிட்டரிடம் சரிபார்த்து வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்து தாமதமின்றி மாத சம்பளம் வர குன்னூர் அரசு மருத்துவமனை அதிகாரிகளிடமும், ஊழியர்களிடமும் பெற்ற பணம் என்று கூறினார். எனவே அந்த பணம் ரூ.29,000/-ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பணம் கொடுத்தவர்கள் விவரத்தை ஒரு பேப்பரில் எழுதியுள்ளதாக சொல்லி தனது மேஜை மீதிருந்த ஒரு பேப்பரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பேப்பரானது வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது இன்று 08.02.2019 ஆம் தேதி பகல் 13.45 மணிக்கு தொடங்கி 16.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது தலைமை காவலர் சக்தி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையில் தலைமை மருத்துவ அதிகாரி திரு.விஸ்வநாதன் அவர்களும், பதிவறை உதவியாளர் திரு.B.நந்தகுமாரும், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் மற்றும் உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்

8/2/19

திருமதி.B.கீதாலட்சுமியும் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் தணிக்கையின் போது குன்னூர், அரசு மருத்துவமனை அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 08.02.2019-ம் தேதி 17.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2019/AC/NI சட்ட பிரிவு 7 of PC (Amendment) Act, 2018 ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.29,000/-(ரூபாய் இருபத்தொன்பதாயிரம் மட்டும்) ஆகியவற்றை கனம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
8/2/19
Inspector of Police
Vigilance and Anti-Corruption
The Nilgiris

Scanned by CamScanner